**செ. கு. எண்**:383 **நாள்**:28.10.12

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா**
அவர்களின் அறிக்கை – 28.10.2012

27.10.2012 அன்று மருதுபாண்டியர் நினைவு நாளினை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவிப்பது தொடர்பாக, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இரு கிராமத்தினரிடையே ஏற்பட்ட மோதலை தணிக்கும் பொருட்டு, மானாமதுரை உள்கோட்ட துணைக் கண்காணிப்பாளர் தலைமையிலான காவல் படை சம்பவ இடத்திற்கு விரைந்தது.

இந்தச் சம்பவத்தில் ஒரு தரப்பினர் மற்றொரு தரப்பினரை ஆயுதங்களால் தாக்கிவிட்டு தப்பிச் செல்லும் போது, அந்தப் பகுதியில் மேலும் வன்முறை ஏற்படாத வகையில் கலவரக் கும்பலை பிடிக்கும் முயற்சியில் காவல் துறை ஈடுபட்ட போது, கடமை உணர்ச்சியுடனும், துணிச்சலுடனும் வன்முறைக் கும்பலை எதிர்கொண்ட காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. ஆல்வின் சுதன், தலைமைக் காவலர் திரு. சிவகுமார், தனிப் பிரிவு தலைமைக் காவலர் திரு. கர்ணன் ஆகியோர் வன்முறைக் கும்பலின் தாக்குதலுக்கு ஆளாயினர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. ஆல்வின் சுதன் உயிரிழந்தார். படுகாயமடைந்த தலைமைக் காவலர் திரு. சிவகுமார், தனிப் பிரிவு தலைமைக் காவலர் திரு. கர்ணன் ஆகியோர் மதுரையில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. ஆல்வின் சுதன் இறந்த செய்தி அறிந்து நான் துயரமும், மன வேதனையும் அடைந்தேன். இந்தச் சம்பவத்தில் வன்முறைக் கும்பலை துணிச்சலுடனும், கடமை உணர்ச்சியுடனும் எதிர்கொண்டு தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த உதவி ஆய்வாளர் திரு. ஆல்வின் சுதன் அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது குடும்பத்திற்கு **5** லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது இறுதிச் சடங்கில் அமைச்சர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும், இறுதிச் சடங்கின் போது முழு காவல் மரியாதை வழங்கப்பட வேண்டும் என்றும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயரச் சம்பவத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வரும் தலைமைக் காவலர்கள் திரு. சிவகுமார் மற்றும் திரு. கர்ணன் ஆகியோருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் விரைவில் பூரண குணமடைந்து பணிக்கு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**